[பேரவைத் தலைவர்] [1986 மே 13

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 35/1986) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஐ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

பேரவை இன்று மாலையிலும் கூடும்.

14-5-1986 அன்று புதன்கிழமை காலை வினாக்கள்-விடைகள்; அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு மற்றும் அரசினர் சட்ட முன்வடிவுகளை அறிமுகம் செய்து முடித்த பின், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை நீக்குவது குறித்த அரசினர் தீர்மானம் முன்மொழியப் பெற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற்று முடிவுற்றபின் அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவை மாலையிலும் கூடும். 15—5—1986 வியாழக்கிழமை அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்து நிறைவேற்றப் படும்.

மற்றும் இதர அரசு அலுவல்கள் ஏதாவது இருப்பின் அவைகளும் எடுத்துக்கொள்ளப் பெற்றப் பின் பேரவையின் கூட்டம் அன்று முற்பகலுடன் முடிவு பெறும்.

பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4—30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(இ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு 1986 (மே. செ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1986) ஆய்வு செய்யப் பெற்று, பரிந்துரைகள் எதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உஉ) வேளாண் விளைப் பொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 34/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ''.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை இந்த அவையில் எத்தனையாவது தடவை கொண்டுவருகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் நிறைவு ஏற்படும்போது அவற்றை அரசாங்கம் கலைத்துவிட்டு எடுத்துக் கொள்வது, சூப்பர்ஸெஷன் என்ற நடவடிக்கை தொடர்ச்சியாக நடந்துவருகிறது. இங்கே கொடுத்திருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவிலேகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை காலமாக

** 1986 ஆம் ஆணடு மே 7 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.